16th March 1966]

திரு. சோ. ஆறுமுகம் : தோட்ட வேலைகளில் இப்படிப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். தோட்ட வேலைகளில் அமருவதற்கு என்னென்ன தகுதி பெற்றிருக்க வேண்டும்? எந்த அடிப்படையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுவரை யாரும் இதனால் வேலையில்லாமல் போகவில்லை என்று குறிப்பிட்டேன். இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கின்ற தகவலின்படி, வேறு பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு இடமில்லை என்றால், தோட்ட வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தகுதிக்கு ஏற்றபடி பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : அவர்களை ஹையர் கிரேட் ஆசிரியர்களாக நியமிப்பதற்குக் குறுகிய காலப் பயிற்சி ஏதாவது கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சிக்குக் குறுகிய காலப் பயிற்சி என்பது போதாது.

வாணிப இயல் ஆசிரியர்கள்

* 314. கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் செகரட்டேரியல் பிரிவில் வேலை பார்க்கும் Commercial Instructor (Higher Grade) சுருக்கு எழுத்துப் பயிற்சி பெற வேண்டும் என்ற சர்க்கார் விதியினைத் தளர்த்தும் நோக்கம் பரிசிலனையில் உள்ளதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுருக்கெழுத்துப் பயிற்சி பெறாதவர்களையும் Commercial Instructor களாக நியமிக்கலாம் ஆகவே விதியினை தளர்த்த வேண்டிய அவசியமில்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இவ்வாறு விதிகளைத் தளர்த்தும்போதும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று பே கமிஷன் அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி தகவல் ஒன்றுமில்லை.

பள்ளிக் கண்காணிப்பாளர்கள்

* 315. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் வட்டக் கண்காணிப்பாளர்களாக (Deputy Inspectors of Schools) வேலை செய்யும் ஆண், பெண் இருபாலர்கள் எத்தனை பேர்?

(இ) இதில் ஹரிஜனங்கள் தனித்தனியே எத்தனை பேர்?

[16th March 1966

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 324.

(b) Men—7.
Women—Nil.

மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள்

* 316. கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்தில் பணியாற்றும் மொத்த மாவட்டக் கல்விக் கண்காணிப்பாளர்கள் D.E.O. எத்தனை பேர்?

(இ) இவர்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 45.

(b) Nil.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 306. கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நகரப் பஞ்சாயத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், எத்தனை நகரப் பஞ்சாயத்துக்களில் திறக்கப்பட்டுள்ளன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். ஆனால், அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர பஞ்சாயத்துகளுக்காக மட்டும் தொடங்கப்படவில்லை.

(இ) 34 நகர பஞ்சாயத்துகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. மா. தண்டாயுதபாணி : தலைவர் அவர்களே, இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் வைத்திய வசதி பெறுவதற்கு வாய்ப்பில்லாத குறிப்பிட்ட கிராமங்களில் வைத்திய வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஆரம்பிப்பதாகத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கட்டட வசதி இல்லை என்ற காரணத்தினால் நகர் புறத்தில் ஆரம்பித்தால் நோக்கமே ஈடேறாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இதை மீண்டும் பரிசீலனை செய்து கூட்டு மன்றங்களில் தீர்மானம் போட்டு எந்தக் கிராமத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்தக் கிராமப் பஞ்சாயத்திலேயே அதை ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : டவுன் பஞ்சாயத்திலே ஏற்படுத்தப்பட்டாலும் கூட சுற்றி இருக்கக் கூடிய பல பஞ்சாயத்துக்களுக்கு அது பயன்படுகிறது. அதனால் மருத்துவ வசதி